# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 18.09.2019**

**முன்னிலை**

**திரு.இரா.தட்சிணாமூர்த்தி, பி.எஸ்ஸி., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 148/A/2018**

Thiru R.R. Kuppusamy
300/117, Sourashtra Teachers Colony . மேல்முறையீட்டாளர்
Anuppanady Road
Madurai - 625 009.

*/எதிர்*

பொதுத் தகவல் அலுவலர்
வட்டாரப் போக்குவரத்து அலுவலரின்
நேர்முக உதவியாளர்
வட்டார போக்குவரத்து அலுவலகம் பொது அதிகார அமைப்பு
மதுரை (வடக்கு), மதுரை மாவட்டம்.

**ஆணை**

இவ்வழக்கில் இவ்வாணையத்தால் இன்று (18.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் Thiru R.R. Kuppusamy ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 7 (1)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும்.. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு, பெ.சீனிவாசன், பொதுத் தகவல் அலுவலர்/வட்டாரப் போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் (பொ),/கண்காணிப்பாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், மதுரை (வடக்கு), மதுரை ஆஜரானார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் 04/03/2018 தேதியிட்ட மனுவில், 10/04/2017 தேதியிட்டு ஆணையர் மற்றும் செயலாளர், தமிழக அரசு உள்துறை

அவர்களுக்கு தான் அனுப்பிய கடிதத்தின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தகவல்களை வழங்கக் கேட்டு பொதுத் தகவல் அலுவலர், ஆணையர் மற்றும் செயலாளர், உள்துறை, தமிழக அரசு, சென்னை-9 -க்கு விண்ணப்பித்துள்ளார். 19/03/2018 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர், உள்துறை, சென்னை-9 அவர்கள் மனுதாரரின் மனுவைப் பிரிவு 6(3)-ன்கீழ் பொதுத் தகவல் அலுவலர் / உதவி செயலாளர், போக்குவரத்து ஆணையர் அலுவலகம், சென்னை-5 அவர்களுக்கு மாற்றி அனுப்பி, மனுதாரர் கோரும் தகவல்களை அளிக்குமாறு தெரிவித்துள்ளார். அதன் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார். இந்நிலையில், 06/04/2018 தேதியிட்ட கடிதத்தின்படி போக்குவரத்து ஆணையர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் மனுவைப் பிரிவு 6(3)-ன்படி பொதுத் தகவல் அலுவலர், வட்டார போக்குவரத்து அலுவலகம், மதுரை (வடக்கு) அவர்களுக்கு அனுப்பி மனுதாரருக்குத் தகவல்களை வழங்கிடுமாறு தெரிவித்துள்ளார். அதன் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார். அதன்பின்னர், 19/04/2018 தேதியிட்டு நேர்முக உதவியாளர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர், வட்டார போக்குவரத்து அலுவலகம், மதுரை (வடக்கு), மனுதாரருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மனுதாரர் கோரியுள்ள விவரங்கள் ஏதும் தெளிவாக இல்லாத காரணத்தால், மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து நேரில் வந்து விளக்கமளித்து உரிய தகவல் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். அதன்பின்னர், மனுதாரர் 13/06/2018 தேதியிட்டு பிரிவு 18 (1)-ன்கீழ் புகார் ஒன்றை இவ்வாணையத்திற்கு அனுப்பி, தான் கோரிய தகவலைத் தர மறுக்கும் பொதுத் தகவல் அலுவலர் மீது விசாரணை ஒன்றை நடத்தி தக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கேட்டுள்ளார்.

3. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், இவ்வழக்கில் ஆணையத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்றவுடன் சம்பந்தப்பட்ட மனுதாரர் திரு. R.R. குப்புசாமி அவர்களை 05/09/2019 மற்றும் 06/09/2019 தேதிகளில் கைபேசி மூலமாக தொடர்பு கொண்டு அவரது கோரிக்கை என்னவென்று தெரிந்து கொண்டதாகவும், அதன்படி உரிய ஆவணங்களோடு அலுவலரை சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது என்றும், அதன்படி 09/09/2019 அன்று மதுரை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வந்து வட்டார போக்குவரத்து அலுவலரை மனுதாரர் சந்திந்ததாகவும், மனுதாரரிடம் அசல் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அவர் வைத்திருந்த இரு சக்கர வாகன ஓட்டுநர் உரிமத்தின் நகலைப் பார்வையிட்டபோது அந்த ஓட்டுநர் உரிமம் கடந்த 2012-ம் வருடத்திலேயே காலாவதியாகி விட்டிருந்ததாகவும், 1988-ம் வருடத்திய மோட்டார் வாகன சட்டத்தில் தற்போது 01/09/2019 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திருத்தச் சட்டம் 32/2019-ன்படி மேற்கண்ட சட்டப்பிரிவு 15 உட்பிரிவு 4 விளக்கம் 2-ன்படி ஓராண்டுக்கு மேலாக புதுப்பித்தல் செய்யப்படாமல் உள்ள ஓட்டுநர் உரிமம் மறு தேர்வு நடத்துதல் (Re-test) என்ற அடிப்படையில் புதுப்பித்தல் செய்யலாம் என்று கூறப்பட்டுள்ளது என்றும், மறு தேர்வு அடிப்படையில் ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் செய்ய மோட்டார் வாகன சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ள விவரம் மனுதாரருக்கு எடுத்து சொல்லப்பட்டு அதை மனுதாரரும் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில், அவருக்கு மதுரை மைய வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இரு சக்கர வாகனத்தின் பழகுநர் உரிமம் (Learner’s Licence) அன்றே (09/09/2019) மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், பழகுநர் உரிமம் பெற்று 30 தினங்கள் கழிந்த பின்னர் ஓட்டுநர் தெரிவின் மூலம் இரு சக்கர வாகனம் ஓட்டுவதற்கு நிரந்தர ஓட்டுநர் உரிமம் வழங்கப்படும் என்றும், அந்த விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து, எனவே மனுதாரர் கோரிய தகவல்கள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளதாகவும், அவரது கோரிக்கையும் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும், இது குறித்து மனுதாரரும் ஆணையத்திற்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்

என்றும் தெரிவித்து, அதன் நகல்களை சமர்ப்பித்து, வழக்கு விசாரணையை முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

4. மேற்சொன்ன ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் இரு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம் குறித்த அவரது கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதையும், அது குறித்த விவரங்கள் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளன என்பதையும் நன்கு அறிய முடிகிறது. மேலும், இதுகுறித்து மனுதாரர் 10/09/2019 தேதியிட்டு ஆணையத்திற்கு இவ்வழக்கு (CP 148/A/2018) குறித்து பிரமாண வாக்குமூலம் ஒன்றை அளித்துள்ளார் என்பதையும், அதில், I therefore humble solicit the Hon'ble Commissionarate to treat the matter as settled and I request that no further action is necessary on my complaint என்று குறிப்பிட்டுள்ளார் என்பதையும் காண முடிகிறது. **இந்நிலையில், இவ்வழக்கில் மேலும் விசாரிக்க ஏதுமில்லை என்று முடிவு செய்து, இந்த புகார் மனுவின்மீதான விசாரணையை ஆணையம் இத்துடன் முடித்துக்கொள்கிறது.**

**ஓம்/- (இரா. தட்சிணாமூர்த்தி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 148/A/2018**
பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்
வட்டாரப் போக்குவரத்து அலுவலரின்
நேர்முக உதவியாளர்
வட்டார போக்குவரத்து அலுவலகம்
மதுரை (வடக்கு), மதுரை மாவட்டம்.

**மனுதாரர்**

Thiru R.R. Kuppusamy
300/117, Sourashtra Teachers Colony
Anuppanady Road
Madurai - 625 009.

*RS/Sr.PS 19.09.2019*